# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093601

1. District : DVAC    PS: DVAC, HQRS    Year: 2019    FIR No.: 18    Date: 03.10.2019
   மாவட்டம்    காவல்நிலையம்    ஆண்டு    மு.த.அ. எண்    நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018    Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Cr.P.C    Sections பிரிவுகள்: 102
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : 02.10.19 நாள் முதல்    Date to : 02.10.19 நாள் வரை
   Time Period : நேர அளவு    Time from : 03.00 hrs நேரம் முதல்    Time to : 07.45 hrs. நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 03.10.19    Time : 12.30 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 03.10.19    Time : 17.00 hrs.
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    நேரம்

4. Type of information : Written/ Oral : Written (Computer typed)
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 20 km West.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : Nazarathpet RTO Check Post. முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :    District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Thangavelu    (b) Father's/ Husband's Name :
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்    தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : District Inspection Cell Officer.    (g) Address : Collectorate, Kancheepuram, Kancheepuram District.
   தொழில்    முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tmt C. Deepa W/o Arul Murugan, Motor Vehicle Inspector (NT), Nazarathpet RTO Check post
   2. Tr. K. Kalaibabu S/o Kabali, Office Assistant, Nazarathpet RTO Check Post.
   3. Tr. S. Ravichandran S/o Sigamani, Computer Operator.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - No Delay -

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved : Amount RS 65,900/-
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: –
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : –
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Content is enclosed in a separate sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J. Christy Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Information sent to the Complainant

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station [signature] 3/10/19
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 03.10.19
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 17.30 hrs.

Name: பெயர் J. CHRISTY
Rank நிலை Inspector of Police. No எண்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.18/2019 பிரிவு 7 ஊழல் தடுப்புச் (திருத்தப்பட்டது) சட்டம் 2018 மற்றும் கு.வி.மு.ச பிரிவு 102 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12-ன் தொடர்ச்சி பின்வருமாறு.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு (1) ஆய்வாளர் ஜோ.கிறிஸ்டி, ஆகிய நான் 03.10.2019 அன்று 12.30 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.எஸ்.தங்கவேலு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம், என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை திரு.வா.பாஸ்கரன், துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வுக் குழு-1 சென்னை அவர்கள் மனுவை பரிசீலனை செய்து உத்தரவு பெற்று மனுவின் தன்மைக்கேற்ப 12.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய அறிவுறுத்தியதன் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.18/2019 பிரிவு 7 ஊழல் தடுப்புச் (திருத்தப்பட்டது) சட்டம் 2018 மற்றும் கு.வி.மு.ச பிரிவு 102 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.எஸ்.தங்கவேலு, மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம், பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. ந.க.எண்.அ/896/2019 நாள் 02.10.2019 அய்யா, பொருள், இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - பூவிருந்தவல்லி, நசரதபேட்டையில் இயங்கி வரும் போக்குவரத்து சோதனை சாவடி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை நாள் 02.10.2019 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக. காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 02.10.2019-ம் தேதி பூவிருந்தவல்லி, நசரதபேட்டையில் இயங்கி வரும் போக்குவரத்து சோதனை சாவடி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் ரூ.65,900/- (ரூபாய் அறுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்), நசரதபேட்டையில் இயங்கி வரும் போக்குவரத்து சோதனை சாவடி அலுவலகத்தில் வருகை பதிவேடு அக்டோபர் மாதத்திற்குரிய நகல் எடுக்கப்பட்டது. மேலும் இந்த கூட்டுத் தணிக்கையின் போது தயார்

செய்யப்பட்ட கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள், பணம் ரூ.65,900/-, இத்துடன் (1) திருமதி. சி.தீபா, க/பெ.அருள் முருகன், மோட்டார் வாகன ஆய்வாளர், (2) திரு.க.கலைபாபு, த/பெ கபாலி, அலுவலக உதவியாளர் (3) திரு.சி.பிரசாந்த், த/பெ.சந்திரன், (4) திரு.பி,முத்து, த/பெ.பலராமன், (5) திரு.இ,வினோத்குமார், த/பெ.இளங்கோவன், (6) திரு.த.மனோஜ் குமார், த/பெ. தணிகைவேல் மற்றும் (7) திரு.அ,நவீன், த/பெ.அருள் ராஜ், (8) திரு.சி.ரவிச்சந்திரன், த/பெ. சிகாமணி ஆகியோரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் நம்பிக்கைக்குரிய திரு.எஸ்.தங்கவேலு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம். இணைப்பு மேற்கண்டவாறு. 03.10.2019 Tmt.J.Christy, Inspector register a case on the complaint and investigate. Sd//V.Baskar, Deputy Superintendent of Police, Received the letter on 03.10.2019 at 12.30hrs and registered a case in V&AC, Head Quarters, Cr.No.18/2019 u/s 7 of The Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.PC Sd//J.Christy, Inspector/SIC-1, 03.10.2019. காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழும அலுவலரும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் சிறப்பு புலனாய்வுக் குழு-1, காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையிலான குழுவும் ஆகியோர் இணைந்து இன்று 02.10.2019-ம் தேதி அதிகாலை சுமார் 3.00 மணியளவில் சென்னையிலிருந்து பெங்களுரு செல்லும் நெடுஞ்சாலையில் பூவிருந்தவல்லி நசரத்பேட்டையில் உள்ள தமிழக அரசின் போக்குவரத்துத் துறையின் சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை. இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்:- 1. திரு. எஸ்.தங்கவேலு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம். 2. திரு.வா.பாஸ்கரன், காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16. 3. திரு.S.செந்தில்குமார், காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16. 4. திருமதி.S.மலர்கொடி, காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. 5, திருமதி.ஊ,தீபா, மோட்டார் வானக ஆய்வாளர் (NT), வட்டார

போக்குவரத்து அலுவலகம், பூந்தமல்லி, சென்னை-56, 6, திரு.K.கலைபாபு, அலுவல உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், பூந்தமல்லி, சென்னை-56, சென்னையிலிருந்து பெங்களூரு செல்லும் நெடுஞ்சாலையில் பூவிருந்தவல்லி நசரத்பேட்டையில் உள்ள தமிழக அரசின் போக்குவரத்துத் துறையின் சோதனைச் சாவடியில் வாகன ஓட்டுனர்கள் மற்றும் ஆட்களிடமும் நேரடியாக கையூட்டு கேட்டு பெற்றுக் கொண்டு ஆவணங்களில் முத்திரையிடுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் மேற்படி சோதனைச்சாவடியில் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்த அலுவலகத்தின் பிரதான வாசல் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. கூட்டு தணிக்கை மேற்கொண்டபோது வாசலிலேயே திறந்தபடி உள்ள அலுவலகத்தில் மேற்கு மூலையில் திரு. திருமதி.C.தீபா, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத), தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, பெங்களூரு நெடுஞ்சாலை, நசரத்பேட்டை, பூவிருந்தவல்லி, சென்னை, அவர்கள் வடக்கு நோக்கி அமர்ந்தவாறு அலுவலில் இருந்தார். மேற்படி அலுவலகத்தின் அலுவலக உதவியாளர் திரு.கே.கலைபாபு என்பவருடன் அரசு அலுவலர்கள் அல்லாத திரு.ஈ.வினோத்குமார், திரு.சி.பிரசாந்த், திரு.ஏ.நவீன் ஆகியோர் சாலையோரத்தில் நின்று கொண்டு சாலையில் செல்லும் வாகனங்களை ஓரமாக நிறுத்துமாறு சைகை செய்து கொண்டிருந்தனர். மேலும் அலுவலகத்திற்குள் அரசு அலுவலர் அல்லாத திரு.டி.முத்து என்பவர் மேற்சொன்னவாறு நிறுத்தப்பட்ட வாகனங்களிலிருந்து வரும் ஓட்டுனர்கள் மற்றும் வாகன ஆட்களிடமிருந்து பணத்தை பெற்றுக் கொண்டு அவர்கள் கொண்டு வரும் ஆவணங்களில் முத்திரையிட்டுக் கொண்டிருந்தார். அரசு அலுவலர் அல்லாத திரு.எஸ்.ரவிச்சந்திரன் என்பவர் சோதனைச் சாவடிக்கு வரும் வாகனங்களுக்கு வரியை வசூலித்து கணினியில் பதிவு செய்து கொண்டிருந்தார். அலுவலகத்திலிருந்த வருகைப் பதிவேடு மற்றும் பணக் கையிருப்பு பதிவேடு ஆகியவை மாவட்ட ஆய்வுக் குழு அலுவலரால் சோதனை செய்யப்பட்டது. நேற்று (01.10.2019) காலை 8.00 மணிக்கு பகல் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத) திருமதி.தீபா, உதவியாளர் திருமதி.லதா மற்றும் அலுவலக உதவியாளர் திரு.கலை பாபு ஆகியோர் பணியில் இருந்ததாக கையொப்பமிட்டுள்ளனர். பின்பு இரவு 8.00 மணி முதல் மோட்டார் வாகன ஆய்வாளர் ((தொழில்நுட்பம் அல்லாத) திருமதி.தீபா என்பவரும் அலுவலக உதவியாளர் திரு.கலைபாபு ஆகியோரும் பணியில் தொடர்ந்து

இருப்பதாக வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடப்பட்டுள்ளது. பின்பு பணக் கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் நேற்று (01.10.2019) அன்று மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.தீபா அவர்கள்பணிக்கு வரும்போது ரூ.1,440/- கையில் வைத்திருந்ததாகவும், உதவியாளர் திருமதி.தீ.லதா என்பவர் ரூ.1,800/-, அலுவலக உதவியாளர் திரு.கலைபாபு என்பவர் ரூ.1,200/- சொந்தப் பணம் வைத்திருந்ததாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த சோதனைச்சாவடியில் இருந்த மேற்படி நபர்களிடம் மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினர் சோதனை செய்த போது, மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.தீபா அவர்கள் தன்னிடம் சொந்தப் பணம் ரூ.600/- வைத்திருப்பதாகவும், அந்த பணம் தனது சொந்த பணம் என சொல்லி பணத்தை ஆஜர் செய்தார். இன்று பணிக்கு வந்த பிறகு தன்னுடைய கார் எண்.டி.என்.19. டபிள்யூ.6673 என்ற பதிவெண்ணுள்ள மாருதி காருக்கு எரிபொருள் நிரப்பவும் சாப்பாட்டு செலவுக்கும் ரூ.840/- செலவு செய்ததாக கூறினார். அலுவலக உதவியாளர் திரு.கலைபாபு என்பவர் தன்னிடம் சொந்தப் பணம் ரூ.370/- வைத்திருப்பதாக சொல்லி அந்த பணத்தை ஆஜர் செய்தார். பணிக்கு வந்த பிறகு தன்னுடைய கார் எண்.டி.என்.72.டிடி.9676 என்ற பதிவெண்ணுள்ள மாருதி காருக்கு எரிபொருள் நிரப்பவும் சாப்பாட்டு செலவுக்கும் ரூ.830/- செலவு செய்ததாக கூறினார். மேற்படி தொகைகள் மேற்படி இருவரிடமே திரும்ப வழங்கப்பட்டது. மாவட்ட ஆய்வு குழும அலுவலர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.தீபா அவர்களின் இரும்பு மேஜையின் வலது பக்க டிராயர்களை மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினருடன் சோதனையிட்ட போது ரூ. 50.900/- (Rs.2,000/- x 7 Nos. = Rs.14,000/-, Rs.500 x 60 Nos. = Rs.30,000/-, Rs.200/- x 4 Nos. = Rs.800/-, Rs.100/- x 61 Nos. = Rs.6,100/- Total Rs.50,900/-) காணப்பட்ட தொகை குறித்து அவரிடம் கேட்க, திருமதி.தீபா அவர்களால் தகுந்த விளக்கம் அளிக்க முடியாவில்லை. மேலும் இந்த பணம் அன்றைய தினம் கணக்கில் வராத பணம் என்று தெரிய வந்ததால், இன்று வந்த வாகன ஓட்டுனர்கள் மற்றும் வாகன ஆட்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணம் என கருதி ரூ.50,900/- மேல் விசாரணைக்காக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் கைப்பற்றப்பட்டது. மாவட்ட ஆய்வு குழும அலுவலர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும்

அலுவலகத்தின் முன்பக்கம் இருந்த கணினிக்கு பக்கத்தில் உள்ள பழைய ஆவணங்கள் இருந்த அறையில் சோதனை மேற்கொண்ட போது ஆவணத்திற்கு இடையில் ரூ.15,000/- (Rs.2,000/- x 7 Nos. = Rs.14,000/-, Rs.500 x 2 Nos. = Rs.1,000/- Total Rs.15,000/-) தொகை இருந்தது. இது குறித்து கணினி இயக்குனராக இருந்த அரசு அலுவலர் அல்லாத திரு.ரவிச்சந்திரன், வயது 33, த/பெ.சி.சிகாமணி, எண்.2/181, பாலபுரம் அஞ்சல் மற்றும் கிராமம், பள்ளிப்பட்டு தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், என்பவரிடம் கேட்க, மேற்படி ரூ.15,000/-ஐ மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.தீபா அவர்கள் இரவு சுமார் 8.00 மணியளவில் தன்னிடம் மேற்படி ரூ.15,000/-ஐ கொடுத்து ஆவண அறையில் ஆவணங்களுக்கு நடுவில் வைக்கச் சொன்னதாகவும், அதன்படி தான் மேற்படி தொகையை ஆவண அறையின் ஆவணங்களுக்கு நடுவில் வைத்ததாக கூறினார். இந்த ரூ.15,000/- தொகையும் மாவட்ட ஆய்வுக் குழும அலுவலரால் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.ரவிச்சந்திரன் அவர்களை மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் அவர்கள் விசாரிக்க அவர் தான் கடந்த எட்டு வருடங்களாக 2011 முதல் வாகனங்களுக்கு கணினி மூலம் பெர்மிட்டுக்காக பணம் வசூலித்து ரசீது கொடுக்கும் பணியை செய்து வருவதாகவும், தற்போது திருமதி.கீதா, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத) என்பவர் பணிக்கு வரும்போது மட்டும் ரூ.300/- தினச்சம்பளம் கொடுப்பதாக கூறினார். மாவட்ட ஆய்வு குழும அலுவலர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு அலுவலகத்திலிருந்த திரு.சி.பிரசாந்த், வயது 26, த/பெ.சந்திரன், தூத்துவிலம்பட்டு கிராமம், நெற்குணம் அஞ்சல், செய்யூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் என்ற அரசு அலுவலர் அல்லாத நபரை மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் அவர்கள் விசாரிக்க, தான் விவசாயம் தொழில் செய்து வருவதாகவும், ஓய்வு நேரத்தில் டிரைவராக வேலை செய்வதாகவும், தனது தூரத்து உறவினரான மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.தீபா அவர்களின் காருக்கு டிரைவர் இல்லாத காரணத்தால், தான் அவருக்கு டிரைவர் வேலை செய்து வருவதாகவும், அதற்காக திருமதி.தீபா அவர்கள் நாளொன்றுக்கு ரூ.500/- டிரைவர் கூலியாக தருவதாகவும், மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் அவரை சோதனை செய்ய, பிரசாந்த் தன்னிடமிருந்த ரூ.900/- ஆஜர் செய்தார். அப்பணத்தை பற்றி கேட்க, அந்த பணம் தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறியதால், மேற்படி ரூ.900/-ஐ திரு.பிரசாந்த் என்பவரிடமே திரும்ப

வழங்கப்பட்டது. மாவட்ட ஆய்வு குழும அலுவலர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அலுவலத்தின்னுள் இருந்த திரு.B.முத்து, த/பெ.பலராமன், என்பவரை விசாரணை செய்ய தான் டிரைவராக வேலை செய்த போது பூந்தமல்லி சோதனை சாவடியில் உள்ள அலுவலர்களிடம் நட்பானேன். எனக்கு விபத்து ஏற்பட்டதால் பூந்தமல்லி சோதனை சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஸ்டாம் போட்டு அதற்கான பணத்தை கையூட்டாக பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர்களிடம் கொடுப்பேன். அதுபோல் இன்று திருமதி. தீபா, மோட்டார் வாகன ஆய்வாளர் (NT) அவர்கள் பணியில் இருக்கும் போது அவருக்கு உதவியாக பணிபுரிந்துக்கொண்டுயிருக்கும் போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை போலீஸார் சோதனை செய்து ரூ.65,900/- கணக்கில் வராத பணத்தை கைப்பற்றினர். இவ்வாறு எனக்கு இங்கு பணிபுரிவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.700/- தினக்கூலியாக திருமதி. தீபா அவர்கள் எனக்கு கொடுப்பார்கள். மாவட்ட ஆய்வு குழும அலுவலர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். சோதனையின் போது திரு.E.வினோத்குமார், த/பெ.இளங்கோவன், T.மனோஜ் குமார், த/பெ. தணிகைவேல் மற்றும் திரு.A.நவீன், த/பெ.அருள் ராஜ் என்பவர்களை விசாரணை செய்ய அவர்கள் பூந்தமல்லி சோதனை சாவடியில் தினக் கூலியாக வேலைசெய்து வருவதாகவும், RTO அவர்கள் வாகன தணிக்கை செய்யும் போது உதவியாக இருந்து வாகன தணிக்கைக்கு உதவி செய்வதாகவும். இதற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் இதற்கு ரூ.300/- முதல் ரூ.400/- வரை கூலி கொடுப்பதாகவும் தெரிவித்தனர். மேலும் இன்று நாங்கள் பணியில் இருந்த போது அதிகாலை 3 மணியளவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை போலீஸார் மற்றும் குழுவினர் சோதனை செய்தனர். அப்போது பணியில் இருந்த எங்களையும் சோதனை செய்தனர். அப்போது கணக்கில் வராத பணம் ரூ.65,900/- கைப்பற்றப்பட்டது. இது குறித்து மாவட்ட ஆய்வு குழும அலுவலர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். சோதனையின் போது வாகன எண். TN 11 A 0955 என்ற பதிவெண்ணுள்ள டெம்போ டிராவலர் வாகனத்தின் ஓட்டுனர் திரு.ஜி.சுப்ரமணியன் என்பவர் தற்காலிக பெர்மிட் வாங்க மேற்படி சோதனைச் சாவடிக்கு வந்திருப்பதாகவும், இதற்கு முன்னரும் தான் அவ்வாறு வருவதுண்டு என்றும், அவ்வாறு தற்காலிக பெர்மிட் வழங்க சோதனைச்சாவடியில் உள்ள அதிகாரிகள் பெரிய வாகனத்திற்கு கட்டணமில்லாமல் தனியாக ரூ.500/- மற்றும் சிறிய வாகனத்திற்கு ரூ.250/- தொகையை

வசூலிப்பதாக கூறினார். இன்று சோதனைச்சாவடியில் மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினர் சோதனை மேற்கொண்டதால் தன்னிடம் தற்காலிக பெர்மிட் கட்டணம் ரூ.200/- மட்டும் சோதனைச்சாவடியில் உள்ள கணினி இயக்குனர் வசூலித்து அதற்கு ரசீது வழங்கினர் என கூறினார். சோதனையின் போது திரு.R.நடராஜன், த/பெ.ராஜாராம் என்பவரை விசாரணை செய்ய இன்று சென்னை துறைமுகத்திலிருந்து மண்ணூர் Hyundai கம்பனிக்கு காயில் எடுத்து செல்லும் போது பூந்தமல்லி சோதனை சாவடியில் அனுமதி பெறுவதற்காக ரூ.1000/- செலுத்தியதாகவும் அதற்கு ரசீது ஏதும் வழங்கவில்லை என்றும் சோதனை சாவடியில் உள்ள அலுவலர் ரூ.1000/-ஐ பெற்றுக்கொண்டு ரூ.200 திருப்பி கொடுத்ததாகவும் தெரிவித்தார். சோதனை போது மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் அலுவலகத்தில் உள்ள ரொக்க பதிவேடு பக்கங்கள் 1 முதல் 204 பக்கங்கள் ஆய்வு செய்ததில் திருமதி.C.தீபா அவர்கள் 01.10.2019 பகல் பணியின் போது வரி மற்றும் கட்டணம் ரொக்கமாக ரூ.7,28,110/-.மற்றும் 1 % சதவித வரி ரூ.9,830/- மற்றும் வங்கி வரைவு ரூ.2,76,000/- ஆக மொத்தம் ரூ.10,13,940/- இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். அன்று இரவு பணியில் ரொக்கமாக ரூ.1,98,900/- மற்றும் 1 % சதவித வரி ரூ.1,790/- ஆக மொத்தம் ரூ.2,00,280/- இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். ஆக மொத்தம் வரி மற்றும கட்டணம் ரூ.9,26,600/- 1 % சதவித வரி ரூ.11,620/- மற்றும் வங்கி வரைவு ரூ.2,76,000/- ஆக மொத்தம் ரூ.12,14,220/- உள்ளதாக குறிப்பிட்டு கையெப்பமிட்டுள்ளார். இப்பணத்தை மாவட்ட ஆய்வு குழும அலுவலர் ஆய்வு செய்ய அந்த பணம் ரூ.12,14,220/-கான கணக்கு சரியாக இருந்ததால் மேற்படி பணத்தை அவர்களிடம் திருப்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலில் இருந்த திருமதி.C.தீபா மற்றும் அலுவல உதவியாளர் திரு.K.கலைபாபு ஆகியோரை மேலே குறிப்பிட்டள கணக்கில் வராத பணத்தை பற்றி மாவட்ட ஆய்வு குழும அலுவர் அவர்ககள் விளக்கம் கேட்க அதை பற்றி சரியான விளக்கம் அளிக்காததால் பணம் ரூ.65,900/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இரு துறை கூட்டுத் தணிக்கை இன்று 02.10.2019 காலை 7.45 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலகத்தின் அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ அலுவலக ஊழியர்களுக்கோ உடமைகளுக்கோ எவ்வித இடையூறோ,சேதாரமோ இல்லாமல் மேற்கொள்ளப்பட்டது. sd/-xxx (S.தங்கவேலு) மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம். மாவட்ட ஆய்வுக் குழு

அலுவலர், சென்னை மாவட்டம். sd/-xxx (V.பாஸ்கரன்) காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. sd/-xxx (S.செந்தில்குமார்) காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. sd/-xxx (S.மலர்கொடி) காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. sd/-xxx C.தீபா, மோட்டார் வானக ஆய்வாளர் (NT), வட்டார போக்குவரத்து அலுவலகம், பூந்தமல்லி, சென்னை-56 sd/-xxx K.கலைபாபு, அலுவல உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், பூந்தமல்லி,சென்னை-56.

Hon`ble Madam,

The above complaint was registered in V&AC, Headquarters in Cr. No.18/2019/AC/HQ, u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.PC on 03.10.2019 at 17.00 hrs (Sd.XXXX Inspector of Police, SIC-1, V&AC, Chennai-16.) The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, seized unaccounted money a sum of Rs. 65,900, statements of 1. Tmt.C.Deepa, W/o Arul Murugan, 2. Tr.K.Kalai Babu, S/o Kabali, 3. Tr.C.Prasanth, S/o. Chandran, 4. Tr.B.Muthu S/o. Balaraman, 5. Tr.E.Vinoth Kumar S/o. Elangovan, 6. Tr.T.Manoj Kumar, S/o. Thanigaivel, 7. Tr.A.Naveen, S/o. Arul Raj, 8. Tr.S.Ravichandran, S/o.C.Sigamani were submitted before the Hon`ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur.

03/10/19

(ஜோ.கிறிஸ்டி)
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வுக் குழு-1,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.